**செய்தி வெளியீடு எண் :080** **நாள்: 11.01.2022**

**செய்தி வெளியீடு**

**வணிகவரித் துறையில் வரிஏய்ப்பினை தடுத்து, வரிவருவாயினை பெருக்க சுற்றும் படை குழுக்களின் எண்ணிக்கையை 100 ஆக உயர்த்துதல்**

2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டத்தில் வணிகவரித் துறையில் சுற்றும் படை குழுக்கள் 100–ஆக அதிகரிக்கப்பட்டு, பட்டியல் இல்லாமல் செல்லும் வாகனங்களை தடுப்பதற்காக அவர்களுக்கு வாகனங்கள் மற்றும் RFID கருவிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, வணிகவரித் துறையில் உள்ள சுற்றும் படை குழுக்களை 100 ஆக உயர்த்தி, 10.01.2022 அன்று உரிய அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலை காவல் சுற்று வாகனங்களைப் போல் வணிகவரித் துறையில் சுற்றும் படை குழுக்களுக்கு 100 வாகனங்கள் வழங்குவதற்காக நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாகனங்களில், GPS மற்றும் கேமராக்கள் பொருத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சரக்குகள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் வரி ஏய்ப்பு செய்வதை தடுக்கும் பொருட்டு, இந்த வாகனங்கள் அனைத்திற்கும் FASTag RFID கருவிகள் பொருத்தப்படும்.

வணிகவரித் துறையில், நவீன தொழில்நுட்பத்தின் மூலம் விலைப்பட்டியல் இல்லாமல் செல்லும் சரக்குகளின் நகர்வினை கண்காணிக்கும் இந்த 100 சுற்றும் படைகள், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள 'மாநில கட்டுப்பாட்டு அறை' வழியே கண்காணிக்கப்பட உள்ளன. இது வரிஏய்ப்பினை குறைக்கவும் வரிவசூலினை மேம்படுத்தவும் உதவியாக இருக்கும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**